செ.வெ.எண்.21/மே நாள் : 19.05.2020

# பத்திரிக்கைச் செய்தி

## வேளாண்மை பொறியியல் துறை மூலம் சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளி மின்வேலி மானியத்தில் அமைத்தல்.

தமிழகத்தில் தனிநபர் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தியை பாதிக்காத வண்ணமும் விளைபொருட்களின் மூலமாக கிடைக்கும் வருவாயை பெருக்கிடும் நோக்கத்துடனும் சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளி மின்வேலியினை 3 கோடி மானியத்துடன் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2020-21ஆம் நிதியாண்டில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்திட 24.03.2020 அன்று நடைபெற்ற சட்டசபை அறிவிப்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

சூரிய ஒளி மின்வேலி அமைப்பதனால் விலங்குகள், வேட்டைக்காரர்கள் மற்றும் அன்னியர்களுக்கு மின் வேலியில் செலுத்தப்படும் உயர்மின் அழுத்தத்துடன் கூடிய குறுகிய உந்துவிசை மின் அதிர்ச்சியினால் அசௌகரியம் ஏற்பட்டு விளை பொருட்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலும் அதன் மூலம் கிடைக்கும் வருவாய் இழப்பில்லாமலும் விவசாயிகளுக்ககு கிடைத்திட வகை செய்யும்.

விவசாயிகள் தங்கள் பகுதிக்கு ஏற்றவாறு மின்வேலியினை 5 வரிசை (ரூ.250/மீ) 7 வரிசை (ரூ.350/மீ) அல்லது 10 வரிசை (ரூ.450/மீ) அமைப்பினை தெரிவு செய்து கொள்ளலாம். தனிநபர் விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் அல்லது 1245 மீட்டர் மின்வேலி அமைக்க மானியம் வழங்கப்படும். மேலும் சூரிய ஒளி மின்வேலி அமைப்பிற்கான செலவுத் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.2.18 இலட்சம் மானியம் வழங்கிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு அனைத்து விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வதால் இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பத்துடன் சிட்டா, அடங்கல், வரைபடம், ஆதார் நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றுடன் கீழ்க்கண்ட அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## தொடர்புக்கு.

| | |
|---|---|
| 1. | செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை, மாவட்ட ஆட்சியரக வளாகம், தருமபுரி. போன்: 04342-296948 |
| 2. | உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை, மாவட்ட ஆட்சியரக வளாகம், தருமபுரி. போன்: 9443267032 மற்றும் 04342-234927. |
| 3. | உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை, கோவிந்தசாமி நகர், SBI வங்கி பின்புறம், அரூர். போன்: 9443636835 மற்றும் 04346-223839. |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**